**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

CC .**No. 602/2025**

**2026 – ம் ஆண்டு ஜூலை மாதம் 09–ம் தேதி வியாழக்கிழமை அ.சா. 1– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N.ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

**அ.சா.** : 1

**பெயர்** : **கார்த்திக்** **தொழில்** : **டால்மியா சிமெண்ட் கம்பெனியில் வேலை**

**த/பெ.** : **கர்ணன்** **வட்டம்** : அரியலூர்

**கிராமம்** : கல்லமேடு **வயது** : 35

**<u>09.07.2026</u>**

**( எதிரி ஆஜர் )**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கல்லமேடு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் டால்மியா சிமெண்ட் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன சரத்குமார் எனது நண்பர். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 07.10.2021 அன்று நானும் எனது நண்பர் சரத்குமாரும் அமீனாபாத்தில் கிரிகெட் விளையாடிவிட்டு சரத்குமாருக்கு சொந்தமான ஸ்கூட்டி வண்டியில் மாலை 06.00 மணிக்கு சரத்குமார் வண்டியை ஓட்ட நான் பின்னால் அமர்ந்து அரியலூர் நோக்கி வந்துகொண்டிருந்தோம். மானாமதுரை – பெரம்பலூர் பைபாஸ் சாலையில் அதிமுக அலுவலகம் அருகே நாங்கள் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்துகொண்டிருந்தபோது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த பொலிரோ வாகனம் வேகமாக வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதிவிட்டது. அதில் நாங்கள் இருவரும் தூக்கி வீசப்பட்டோம். சரத்குமாருக்கு பின்னந்தலையில் பலத்த அடிப்பட்டது. எனக்கு வலது காலில் ரத்தகாயம் ஏற்பட்டது. அருகில் இருந்தவர்கள் ஆம்புலன்ஸ் வரவழைத்து எங்களை அரசு மருத்துவக்கல்லூரி

மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். பொலிரோவை ஓட்டிவந்தவரை பார்த்தேன். ஆனால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. இரவு 11.00 மணிக்கு சரத்குமார் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்று தெரிந்துகொண்டேன். மறுநாள் காலை போலீசார் மருத்துவமனையில் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இறந்துபோன சரத்குமாருக்கும் எனக்கும் எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால் 6 வருடங்களாக பழக்கம். நானும் சரத்குமாரும் அன்றைய தினம் கிரிக்கெட் விளையாடிவிட்டு வந்தோம் என்றால் சரிதான். எந்த இடத்தில் கிரிகெட் விளையாடிவிட்டு எங்கு சென்றோம் என்றால் அமீனாபாத்தில் விளையாடிவிட்டு அரியலூர் நோக்கி வந்தோம். எந்த திசையில் சென்றோம் என்றால் கிழக்கிலிருந்து மேற்குநோக்கி அதிமுக மாவட்ட அலுவலகம் அருகே தெருவிலிருந்து சாலைக்கு ஏறுவதற்காக வந்தோம். அமீனாபாத்திலிருந்து அரியலூர் வரவேண்டும் என்றால் செந்துறை பைபாஸ் ரவுண்டான சாலையிலிருந்து நேரடியாக அரியலூர் வந்துவிடலாம் என்றால் சரிதான். எதற்காக தெரு சாலையிலிருந்து மெயின் ரோட்டுக்கு வந்தோம் என்றால் நண்பர் ஒருவருக்கு பணம் கொடுத்துவிட்டு வந்தோம். பணம் கொடுக்க சென்ற நண்பர் பெயர் என்னவென்றால் வேலு. அவருடைய வீடு எங்கே என்றால் தெரியாது. எவ்வளவு பணம் கொடுத்தோம் என்றால் ரூ. 1000/-. அன்றைய தினம் நானும் சரத்குமாரும் தலைகவசம் அணிந்திருந்தோமா என்றால் இல்லை. சரத்குமார் அன்றைய தினம் தலைகவசம் அணிந்திருந்தால் தலையில் அடிப்பட்டிருக்காது என்றால் இல்லை எதிரே வந்த வாகனம் மோதிய வேகத்திற்கு அடிப்பட்டிருக்கும். சரத்குமாருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. நாங்கள்

சென்ற ஸ்கூட்டியின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. பொலிரோ வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் சாலை விதிகளை பின்பற்றாமல் தேசிய நெடுஞ்சாலையில் ஏறிவிட்டோம் என்றால் சரியல்ல. எப்போதும் அனுகு சாலையிலிருந்து வரும்போது இரண்டு பக்கமும் பார்த்துவிட்டுதான் வரவேண்டும் என்றால் சரிதான். இறந்துபோனவர் என் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

CC .**No. 602/2025**

**2026 – ம் ஆண்டு ஜூலை மாதம் 09–ம் தேதி வியாழக்கிழமை அ.சா. 2– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N.ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **அ.சா.** | : | 2 | | | |
| **பெயர்** | : | **தனராஜ்** | **தொழில்** | : | **எலக்ட்ரீசியன்** |
| **த/பெ.** | : | **தனபால்** | **வட்டம்** | : | அரியலூர் |
| **கிராமம்** | : | பொய்யூர் | **வயது** | : | 36 |

**<u>09.07.2026</u>**

**( எதிரி ஆஜர் )**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பொய்யூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் எலக்ட்ரீசியனாக வேலை செய்து வருகிறேன். 07.10.2021 அன்று நானும் எனது நண்பர் பிரேம்குமாரும் இருசக்கர வாகனத்தில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அதிமுக அலுவலகம் அருகே சென்று கொண்டிருந்தபோது அப்போது பொலிரோ இருசக்கர வாகனம் ஆரன் அடிக்காமல் வேகமாக வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தது. அந்த பொலிரோ ஒரு ஸ்கூடியை கடக்கும்போது அந்த ஸ்கூட்டி மீது மோதிவிட்டது. ஸ்கூட்டியை ஓட்டியவருக்கு தலையில் அடிப்பட்டு ரத்தம் வந்துகொண்டிருந்தது. பின்னால் அமர்ந்து வந்தவருக்கு காலில் அடிப்படிருந்தது. 108ஆம்புலன்ஸ் மூலம் அவர்கள் இருவரையும் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் அப்போது பின்னால் அமரந்து வந்தவர் தன்னுடைய பெயர் கார்த்திக் என்றும் வண்டியை ஓட்டியவர் சரத்குமார் என்றும் சொன்னார். மேல் சிகிச்சைக்காக சரத்குமாரை ஏஎஸ் மருத்துவமனைக்கு

அழைத்து சென்றார்கள். அன்று இரவு 11.00 மணிக்கு சரத்குமார் இறந்துவிட்டார். பொலிரோ பிக்கப் வாகனத்தின் பதிவு எண் நான் பார்க்கவில்லை. பொலிரோ வாகனத்தை ஓட்டியவரை நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் எலக்ட்ரீசியனாக வேலை செய்கிறேன். போலீசாரை எப்போது பார்த்தேன் என்றால் அடிப்பட்ட இடத்தில் பார்த்தேன். பின்னர் போஸ்மாட்டம் செய்த இடத்தில் பார்த்தேன். அப்போது போலீசார் என்னிடம் என்னுடைய பெயர், முகவரியை வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான். அதற்கு பிறகு சம்மன் கொடுத்து தற்போது சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். இதற்கிடையில் போலீசாரை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். பிக்கப் வாகனத்தை யார் ஓட்டினார் என்பதும் அந்த வாகனத்தின் பதிவு எண்ணும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அடிப்பட்டவர்களை தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு சம்பவம் நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

CC .**No. 602/2025**

**2026 – ம் ஆண்டு ஜூலை மாதம் 09–ம் தேதி வியாழக்கிழமை அ.சா. 3– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N.ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

**அ.சா.** : 3

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** : **விவேக்** | | **தொழில்** : | **காவேரி மருத்துவமனையில் வேலை** |
| **த/பெ.** : **சுந்தரராஜன்** | | **வட்டம்** : | அரியலூர் |
| **கிராமம்** : பொய்யூர் | | **வயது** : | 39 |

<u>**09.07.2026**</u>

**( எதிரி ஆஜர் )**

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது பொய்யூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் காவேரி மருத்துவமனையில் வேலை செய்து வருகிறேன். இறந்துபோன சரத்குமார் எனது தம்பி. கடந்த 07.10.2021 அன்று மாலை சுமார் 06.30 மணிக்கு நான் டால்மியா சிமெண்ட் ஆலையில் வேலை செய்து கொண்டிருந்தபோது எனது நண்பர் பிரேம் என்பவர் எனக்கு போன் செய்து தான் வரும் வழியில் எனது தம்பி சரத்குமாருக்கு விபத்து ஏற்பட்டதாகவும் ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பிவைத்ததாக சொன்னார். நான் நேரடியாக அரியலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். என் தம்பியை பார்க்கவிடவில்லை. அதனால் கார்த்திக்கை பார்த்தேன்.ஆனால் பேசவில்லை. என் தம்பியை மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவமனையில் சேர்க்க சொன்னார்கள். ஆனால் எனக்கு தெரிந்த மருத்துவர் ஏஎஸ் மருத்துவமனையில் இருப்பதால் அங்கு அவரை சேர்த்தேன். 11.20 மணிக்கு என் தம்பி

சரத்குமார் இறந்துவிட்டார். காவல் நிலையத்தில் வைத்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னிடம் என் தம்பிக்கு ஓட்டுநர் உரிமம் இருக்கிறதா என்று கேட்டார்களா என்றால் ஆமாம். என் தம்பிக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இல்லை. என் தம்பி ஓட்டுநர் உரிமம் எடுக்கவில்லை என்றால் சரிதான். என் தம்பி தலையில் தலைகவசம் அணிந்திருந்தால் தலையில் அடிப்பட்டிருக்காது என்றால் சரிதான். மேலும் மோதிய வாகனத்தின் ஓட்டுநர் மெதுவாக வந்திருந்தாலும், ஆரன் அடித்திருந்தாலும் அவருக்கு தலையில் அடிப்பட்டிருக்காது. அனுகு சாலையிலிருந்து வருபவர் தேசிய நெடுஞ்சாலையில் 2 பக்கமும் பார்த்துவிட்டுதான் வரவேண்டும் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.